## வில்கமுவ பிரதேச சபை

## மாத்தளை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஜூன் 12 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------

தலைவருக்கு அனுப்பப்பட்ட எனது அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வில்கமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு கொள்கைகள்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) களஞ்சியப் பண்டங்கள் தொடர்பாக களஞ்சிய முற்பணக் கணக்கு முறைமையினை கடைபிடித்திருக்கவில்லை, அத்துடன் கொள்வனவு செய்யப்படும் களஞ்சிய இருப்புக்கள் நேரடியாக செலவுத்தலைப்புக்களுக்காக வரவு வைக்கப்பட்டிருந்தன.

(இ) நிதிச் செயற்பாடு மற்றும் நிதி நிலைமை பற்றிய கூற்று முன்னைய ஆண்டிற்கான எண்ணிக்கைகளுடன் ஒப்பீட்டு ரீதியாக சமர்பித்திருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுக்கள்

---------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப் பாய்ச்சல்கூற்று சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்கள் மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி இடையே ரூபா 2,221,340 இற்கான வித்தியாசமொன்றும் ஊழியர் பிணை முதலீட்டு கணக்கின் மீதி மற்றும் ஊழியர் பிணை கணக்கின் மீதி இடையே ரூபா 67,608 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 25,037,865 இற்கான 07 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள வித்தியாசங்களது கூட்டுத்தொகை ரூபா 2,095,599 ஆகும்.

1.3.5 தொங்கல் கணக்குகள்

----------------------------------

முன்னைய ஆண்டுகளில் இருந்து முன் கொண்டு வரப்படும் தொங்கல் கணக்கில் காணப்படும் ரூபா 657,609 செலவு மீதியினை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------

நீண்ட காலமாக நிதிக் கூற்றுக்களில் முன் கொண்டுவந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 4,288,359 இற்கான 04 பெற வேண்டிய கணக்குகளில் பெறுமதி மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 1,136,595 இற்கான 02 மீதிகளைத் தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் செயற்பட்டிருக்கவில்லை.

1.3.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் நிதக் கூற்றுக்களில் காணப்படுகின்ற 04 கணக்கு விடயங்கள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 19,804,212 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.8 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு மற்றும் முகாமைத்துவ தீர்மாணங்களுக்கு இனக்கமின்மைகள் சந்தர்ப்பங்களும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | |
| (i) பிரிவு 12 (1)(2) | பிரதேச சபையின் விடயங்கள் மேற்கொள்ளும் போது ஆலோசனை வழங்குவதற்காக காசு மற்றும் கொள்கைகள் தயாரித்தல், வீடுகள் சனசமூக அபிவிருத்தி, தொழிநுட்ப சேவை ஆகிய வசதிகள் தொடர்பாக குழுக்கள் மீளர்ய்வாண்டின் போது தெரிவு செய்திருக்கவில்லை. |
| (ii) பிரிவு 132 (ஏ) | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் இன்றி ரூபா 25,250 இற்கான விளையாட்டு உபகரணங்களும், ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 80 மாணவர்களுக்கு பதக்கங்கள் வழங்குதவதற்காக ரூபா 24,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. |
| (iii) பிரிவு 170 | குறைநிரப்பு மதிப்பீடு ஒன்று சமர்பித்து சபையின் அங்கீகாரம் பெறாமல் மீளாய்வாண்டின் போது 10 செலவு விடயங்களின் கீழ் பாதீட்டு ஏற்பாட்டு வரையறையை மிகைத்து ரூபா 1,218,034 செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (iv) பிரிவு 175(1) | உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி அமைய, பிரதியீட்டு, நாளந்த மற்றும் தற்காலிக அடிப்படையின் கீழ் ஆட் சேர்க்கப்பட்ட 09 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,071,902 இற்கான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் ஓஓஐஏ பிரிவு 4.5 | கடன் கொடுப்பனவு செலுத்தத் தவறிய ஊழியர்கள் 08 பேரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுதொகை ரூபா 79,323 இற்கான கடன் மீதி அவர்களின் பிணையாளரிடம அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதப் பிரமாணம் 395(இ) | மீளாய்வாண்டு தொடர்பாக வங்கி கணக்கு இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இரண்டு மாதத்தினை மிகைத்த தொடர்ச்சியான தாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பண்டக் கணிப்பீடு 2014 ஏப்ரல் 30 திகதி வரை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

1.3.9 போதிய அதிகாரத்தினால் உறுதிப் படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை செலுத்துவது தொடர்பாக அறிக்கைகள்

அனுப்பப்படாமையால் அதன் மீது கணிக்கப்பட்டு, ரூபா 32,419 மிகை அறவீடு செலுத்த நேரிட்டமையால் சபைக்கு நட்டமொன்று ஏற்பட்டுள்ளது.

(ஆ) சபையினால் பேணப்படும் மல்கம்மன மணல் கரை போடும் துறைக்கான மணல் அனுமதிப்பத்திரம் புதுப்படுத்தலுக்காக பிரதேச செயலாளரின் விதப்புரை பெறுவதற்கு முன்னர் சுரங்கம் மற்றும் அகழ்தல் பணிப்பகத்திற்கு ரூபா 11,660 செலுத்தியிருந்த போதிலும் 2013 ஆண்டிற்காக அனுமதிப்பத்திரம் புதுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபை அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்பு இல்லாத கூட்டமொன்றில் பங்குபற்றுவதற்காக தலைவர் சபை நிதியத்தில் இருந்து ரூபா 7,500 தொகையொன்று செலுத்தி தனியார் வாடகை வாகனம் ஒன்று பெற்றருந்தார்.

(ஈ) 2013 ஏப்ரல் 21 திகதி ஹெட்டிபொல வாராந்த சந்தை நடத்துவதற்கு இயலாது போனதால் 2013 மே 23 திகதி எடுக்கப்பட்ட பொதுகூட்ட தீர்மானத்தின் பிரகாரம் மாதாந்த வாடகை ரூபா 17,200 இனால் பதிவழிக்கப்பட்டிருந்தது. அதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,313,985 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரோப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,977,731 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,336,254 இற்கான முன்னேற்றம் ஒன்றினை காட்டியது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

----------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளின் போது பிரதேச சபையின் நடைமுறை பொறுப்புகளை மேவகை செய்வதற்கு தகுதியான மட்டத்தில் நடைமுறை சொத்துக்கள் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

2.3 வருமான நிருவாகம்

------------------------------

2.3.1 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

-----------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதவரி

----------

மீளாய்வாண்டிற்காக பில் போடப்பட்டவை மற்றும் அதுவரை நிலுவை வீதவரிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,030,221 தொகை எனினும் அவற்றில் அறவீடு செய்திருந்த ரூபா 528,132 எனப்படும் நூற்றிற்கு 51 மாத்திரமே.

(ஆ) வாடகை

------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 892,757 இற்கான நிலுவை வாடகை மீதியில் இருந்து பணம் ஏதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திக்கவில்லை.

(இ) நீர்க் கட்டணம்

--------------------

மீளாய்வாண்டிற்காக பில் போடப்பட்ட மற்றும் அதுவரை நிலுவையாக உள்ள நீர்க்கட்டணத்தின் கூட்டுத்தொகை ரூபா 2,054,494 தொகை எனினும் அவற்றில் அறவீடு செய்யப்பட்டுள்ளது ரூபா 1,323,532 எனப்படும் நூற்றிற்கு 64 பெறுமதி ஒன்று மாத்திரமே.

2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

--------------------------------------------------------------------------------

மத்திய மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணம் என ரூபா 892,382 உம் மற்றும் முத்திரை கட்டணமாக ரூபா 34,500 தொகையும் அறவிடப்படவேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஹெட்டிபொல நகரத்தில் மற்றும் பொது சந்தையில் காணப்படும் மலசலகூடங்கள் கேள்வி கோறப்பட்டு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் அங்குள்ள பொது மலசலகூடம் ரூபா 2,000 வருடாந்த வாடகைக்கு தனியார் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது எனினும் அவர் நாளாந்தம் ரூபா 500 இனை விட மிகையாக உழைப்பதெனவும் அதன்படி வருடாந்தம் உழைக்கும் வருமானம் ரூபா 180,000 விட மிகையானது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 1790 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மணல் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளோர் பற்றிய தகவல்கள் சேகரிக்காமையால் ரூபா 3,000 உச்சமட்டமாக அறவிடப்படவேண்டிய வர்த்தக வரியினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போது முடியாதிருந்தது.

3.2 செயற்பாட்டு திறமையின்மை

----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடமையில் இருந்து ஓய்வு பெற்று 06 வருட காலத்தை கடந்துள்ள ஊழியர்கள் 08 நபர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 103,327 இற்கான பதவியணிக் கடன் மீதியினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையினால் பயன்படுத்தப்படும் இரண்டு கப் வண்டிகளில் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான 02 கப் வண்டிகளும், டிரக்டர் ஒன்றும் மற்றும் டிரக்டர் டேலர் ஒன்றுக்குமாக மீளாய்வாண்டின் போது வருமான அனுமதிப்பத்திரமும், கப் வண்டி ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும், டிரக்டர் மற்றும் டேலர் ஒன்றும் காப்புறுதி அணவல் இன்றியும் அவை பாவனையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு சொந்தமான வாகனங்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ளும் போது எரிபொருள் கட்டளைகள் பயன்படுத்தியிருக்கவில்லை. அத்துடன், வாகனங்களுக்கு தேவையான எரிபொருள் பெற்ற பின்னர் சாரதியினால் சமர்பிக்கப்படும் விலைப்பட்டிகளுக்கு பணம் மீளளிப்பு செய்யப்படுகின்றது.

(உ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அங்கீகாரமற்ற 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு சபை செயற்பட்டிருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத ∴ குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

---

மீளாய்வாண்டின் போது ரூபா 793,000 பெறுமதியான 05 சொத்து அலகுகள் பயன்படுத்தப்படாமலும் குறைபயன்பாட்டுடனும் காணப்பட்டது.

3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 செப்டம்பர் மாதம் ரூபா 4,050,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த பஸ் வண்டி பிரயாணிகள் போக்குவரத்துக்காக ஈடுபடுத்தியதன் மூலம் 2013 முதல் அரையாண்டின் போது ரூபா 116,516 இற்கான நட்டமொன்று ஏற்பட்டுள்ளது.

(ஆ) சபைக்கு சொந்தமான கப் வண்டி 2013 மார்ச் 22 திகதி விபத்து ஒன்று ஏற்பட்டு ரூபா 25,831 இற்கான நட்டமொன்று ஏற்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டிருந்த போதும் அந்த நட்டத்தை அறவீடு செய்திருக்கவில்லை.

3.5 ஒப்பந்த நிருவாகம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலக்கம் 05, ரதுன்னேவெவ, மாரக்க என்ற விலாசத்தில் காணப்படும் காணியில் தனியார் கிணறு ஒன்று நிர்மாணிப்பதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 24,570 தொகை பெறுமதியான 27 சீமெந்து பைகள் வழங்கியிருந்தது.

(ஆ) ரூபா 367,221 இற்கான செலவில் நுககொல்ல நூலகத்தை திருத்த வேலை மேற்கொள்வதற்காக சபையினால் நுககொல்ல சமூர்தி சேனையுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருந்தது. அத்துடன் குறிப்பிட்ட மதிப்பீட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய 03 வேலை விடயங்களை மேற்கொண்டிருக்கவில்லை. அத்துடன் மேலும் இரண்டு வேலை விடயங்களை திருப்திகரமான முறையில் செய்திருக்கவில்லை.

(இ) லேடியங்கல நூலக கட்டடத்தின் 32 வேலை விடயங்களின் திருத்த வேலை மேற்கொள்வதற்காக சபையினால் பெதும் எல விவசாய அமைப்புடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் வேலை விடயங்கள் பூர்த்தி செய்த அறிக்கையின் பிரகாரம் 18 வேலை விடயங்கள் மாத்திரம் மேற்கொள்வதற்காக ரூபா 128,677 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் அனைத்து வேலை பகுதிகளையும் பூர்த்தி செய்யாமை தொடர்பாக சபையினால் ஒப்பந்தக்காரருக்கு எதிராக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

3.6 திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்

-------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் குப்பைகளை மீள்சுழற்சி நடைமுறை ஒன்றில் ஈடுபடுத்தாமல் டிரக்டர் மூலம் நாளந்தம் நாமினி ஓய குளத்திற்கு மேலே அமைந்துள்ள அரசாங்க காணியில் போடப்படுவதனால் சுற்றாடல் சிக்கல்கள் போலவே அப்பகுதியில் நடமாடும் காட்டு யானைகள் மற்றும் ஏனைய மிருகங்கள் குப்பையில் இருக்கும் பொலிதீன் போன்ற பொருட்களை உணவாக எடுப்பதனால் அம்மிருகங்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

----------------------------------------------------------------------

4.1 பாதீட்டு கட்டுப்பாடு

---------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ)(ை) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் 03 செலவு விடயங்களுக்காக வழங்கியிருந்த ரூபா 357,000 இற்கான ஏற்பாடுகளில் செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்படாமல் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்படலும் சேமிக்கப்படலும் காணப்பட்டது.

(ii) மேலும் 10 செலவு விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,218,034 இற்காக ஏற்பாடுகளை மிகைத்து அச் செலவு விடயங்களின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ)(i) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் 17 வருமானத் தலைப்புக்களின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 1,702,750 இற்கான வருமானத்தை உழைப்பதற்காக மதிப்பீடு செய்திருந்த போதும் வருமானம் ஏதும் உழைத்திருக்கவில்லை.

(ii) 05 வருமானத் தலைப்புக்களின் கீழ் பாதீட்டு வருமானத்தில் உழைத்திருந்தது 1மூ முதல் 13மூ இடையிலான வீச்சின் பெறுமதியாகும்.

மேற்கூறிய விடயங்களின் பிரகாரம் பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 தீர்க்கப்படாத மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

---

2014 மார்ச் 31 திகதி வரை சபைக்கு சமர்பித்திருந்த கணக்காய்வு ஐயவினாக்களில் 03 இற்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன், அவ் ஐயவினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 958,621 ஆகும்.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) களஞ்சிய கட்டுப்பாடு

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு